# ஆற்காடு நகராட்சி

**2022 டிசம்பர்** மாதம் **26** ஆம் நாள் **திங்கட்கிழமை** பிற்பகல் **4.00** மணிக்கு **1920** ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் அட்டவணை **3ல்** விதி **2(1)** இன்படி **சாதாரணக் கூட்டம்** ஆற்காடு நகராட்சி அலுவலகத்தில் உள்ள மன்ற அரங்கில் நடைபெறும்.

**குறள் எண்.** 525) கொடுத்தாலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
சுற்றத்தான் சுற்றப் படும்.

**பொருள்.** சுற்றத்தார்க்கு வேண்டிய பொருளைக் கொடுத்தாலும், அவரோடு இனிதாகப் பேசுதலும் செய்வானாயின், அவன் சுற்றத்தார் பலராலும் சுழப்படுவான்.

.<u>மன்றப்பொருள்</u>

**பொருள் எண்.01)**

இந்நகராட்சி ஆணையாளர்(பொ) அவர்களின் நவம்பர்–2022 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு.:– 1) மன்றம் பதிவுசெய்யலாம்.

ந.க.எண்.0665/2018/சி1

**தீர்மான எண்**.294, பதிவுசெய்யப்பட்டது

**பொருள் எண்.02)**

இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் நவம்பர்–2022 நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் பதிவுசெய்யலாம்

**தீர்மான எண்**.295, பதிவுசெய்யப்பட்டது

**பொருள் எண்.03)**

இந்நகராட்சியின் 2020–2021 மற்றும் 2021–2022ம் நிதியாண்டின் நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.955/2021/சி1

**தீர்மான எண்**.296, பதிவு செய்யப்பட்டது

**பொருள் எண்.04)** இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டில் உள்ள இரண்டு ஈப்பு வாகனம் TN73E0138 மற்றும் TN73E0155–ல் வாகன இதர பொருத்தங்கள் தற்போது கிழிந்து மற்றும் பழுதடைந்துள்ளதால் இதனை அவசர அவசியம் கருதி Baba Car Audios. Vellore என்ற விற்பனையாளர் இடத்தில் புதியதாக மாற்றப்பட்டுள்ளது. எனவே, இதற்கான செலவினத் தொகை ரூ.15500/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) TN73E0138 மற்றும் TN73E0155 என்ற இரண்டு அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனத்தில் உள்ள இதர பொருத்தங்கள் அனைத்தும் Baba Car Audios. Vellore என்ற விற்பனையாளர் இடத்தில் புதியதாக மாற்றப்பட்டுள்ளதற்கு

மன்றப்பொருள் எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று செலவினத்தை மேற்கொண்டமைக்கு ஒப்புதல் வழங்கலாம்.

3) இச்செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.2049/2022/எச்1

**தீர்மான எண்**.297, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.05)**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண். 28013/2021/SBM1, நாள்.21.11.2022ஆம் நாளிட்ட கடிதத்தில் Swachh Certification for GFC and ODF+ Swachhatam Poral –இல் பதிவேற்றம் செய்ய வேண்டி இந்நகராட்யின் எல்லைக்குபட்ட பகுதிகளில் குப்பை இல்லா பகுதி மற்றும் திறந்த வெளியில் மலம் மற்றும் சிறுநீர் கழித்தல் இல்லை என இரண்டு விளம்பரங்களை பொது மக்களுக்கு விழிப்புணர்வு மேற்கொள்ள வேண்டி உள்ளுர் இரண்டு தின செய்தி தாளில் பிரசுரிக்க தோராயச் செலவினத் தொகை ரூ.20000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) இந்நகராட்சியின் எல்லைகுட்பட்ட பகுதிகளில் திறந்த வெளியில் மலம் மற்றும் சிறு நீர் கழித்தல் இல்லை என்ற விழிப்புணர்வினை பொது மக்களுக்கு ஏற்படுத்த வேண்டி உள்ளுர் இரண்டு தினச் செய்தி தாளில் விளம்பரம் செய்ய நகர மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்ட்மைக்கு மன்ற ஒப்புதல் வழங்கலாம்.

3) இச்செலவினத் தொகையினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 2234/2022/எச்1

**தீர்மான எண்**.298, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.06)**

இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம், பொது சுகாதார பயன்பாட்டிற்கும் மற்றும் தொற்று நோய் தடுப்பிற்காக நீர்த்த சுண்ணாம்பு தூள் 5000 கிலோ மற்றும் பிளீச்சிங் பவுடர் 1000 கிலோ அளவிற்கு தேவைப்படுவதால் இதனை விலைப்புள்ளி கோரி வாங்க தோராயச் செலவினத் தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பகிறது.

**அ.கு.** 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் மற்றும் பொது சுகாதாரப் பயன்பாட்டிகாக நீர்த்த சுண்ணாம்பு தூள் மற்றும் பிளீச்சிங் பவுடர் தேவைப்படுவதால் இதனை கொள்முதல் செய்ய மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரி நடவடிக்கை எடுத்தமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) இச்செலவினத்தை வருவாய் நிதி அல்லது திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் (SUC) நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 2095/2022/எச்1

**தீர்மான எண்**.299, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.07)

இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பயன்பாட்டில் உள்ள இலகு ரக வானம் TN73AC 3454 என்ற வாகனம் திடீர் பழுது ஏற்பட்டதால் இதனை அவசர அவசியம் கருதி ஓட்டுநர் திரு. கே. இராஜன் என்பவரால் நிவர்த்தி செய்யப்பட்டு செலவினத் மேற்கொண்டுள்ளதால், எனவே, மேற்படி ஓட்டுநர் அவர்களுக்கு இச்செலவினத் தொகையினை திருப்பி வழங்க வேண்டி ரூ.9635/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு, 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பயன்பாட்டில் உள்ள இலகு ரக வாகனம் TN73AC 3454 என்ற வாகனம் திடீர் பழுது ஏற்பட்டுள்ளதால் இதனை திரு. கே. ராஜன் ஓட்டுநர் என்பவரே அவசர அவசியம் கருதி பழுதினை நிவர்த்தி செலவினத் தொகையினை மேற்கொண்டமையால், இதனை திருப்பி மேற்படி ஓட்டுநருக்கு வழங்க வேண்டி மன்றப்பொருள் எதிர்நோக்கி நகர மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) இச்செலவினத் தொகையினை வருவாய் நிதி மற்றும் திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நிதியில் (SUC) மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 1729/2022/எச்1

**தீர்மான எண்**.300, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.08)

இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம், பொது சுகாதார பயன்பாடு மற்றும் பொது கழிவறைகளை சுத்தம் செய்ய வேண்டி பினாயில் 500 லிட்டர் மற்றும் ஆசிட் 500 லிட்டர் என்ற அளவில் தேவைப்படுவதால் இதனை விலைப்புள்ளி கோரி வாங்க தோராயச் செலவினத் தொகை ரூ.70,000–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பகிறது.

அ.கு, 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) திடக்கழிவு மேலாண்மைத் திட்டம், பொது சுகாதாரப் பயன்பாடு மற்றும் பொது கழிவறைகளை சுத்தம் செய்ய பினாயில் மற்றும் ஆசிட் போன்றவைகள் தேவைப்படுவதால் இதனை கொள்முதல் செய்ய மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரி நடவடிக்கை எடுத்தமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) இச்செலவினத்தை வருவாய் நிதி அல்லது திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் (SUC) நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 2095/2022/எச்1

**தீர்மான எண்**.301, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.09)**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 25212/2022/SBM2 நாள். 13.10.2022 தேதிய கடிதத்தில் தூய்மை இந்தியா திட்டம் 2.0 குப்பைகள் இல்லாத நகரமாக உருவாக்க விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. எனவே, இந்நகராட்சியின் சார்பாக 17.10.2022 முதல் 22.10.2022 வரை நாட்களில் பொது மக்களுக்கும் பள்ளி மாணவர்களுக்கும் குப்பைகளை பிரித்து வழங்கும் முறையினை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. விழிப்புணர் பேனர்களை உடனடியாக அவசர அவசியம் கருதி துப்புரவு அலுவலர் அவர்களால் தயார் செய்து செலவினம் மேற்கொண்ட தொகை ரூ.6700/-யினை திருப்பி வழங்க வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) தூய்மை இந்தியா திட்டத்தினை குறித்து பொது மக்களுக்கும் பள்ளி மாணவர்களுக்கும் குப்பைகளை தரம் பிரிக்கும் முறையினை விழிப்புணர்வு ஏற்படுத்த பேனர்களை துப்புரவு அலுவலர் அவர்களால் தயார் செய்து செலவினம் மேற்கொள்ளப்பட்டமைக்கு மன்றப்பொருள் எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகையினை திருப்பி வழங்கப்பட்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) இச்செலவினத்தை வருவாய் நிதி அல்லது திடக்கழிவு மேலாண்மைத் திட்ட நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 1881/2022/எச்1

**தீர்மான எண்**.302, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.10)** இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் செல்லும் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான Channal (பெரிய அசன்புரா முதல் முப்பதுவெட்டி) Desilting தூர்வாருதல் பணிகள் மேற்கொள்வதற்கான தோராய செலவினத்தொகை ரூ.3.20 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்

2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலம்.

**தீர்மான எண்**.303, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.11)** ஆற்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18, நகராட்சிக்கு சொந்தமான நடுநிலைப்பள்ளி அண்ணாநகர், ஆற்காடு பள்ளியில் தெற்குப் பக்கம் உள்ள இரண்டாவது கட்டிடம் ICDS அருகில் உள்ள கட்டிடம் மிகவும் பழுதடைந்துள்ளதால் அப்பள்ளியில் உள்ள மாணவர்கள் நலனை கருத்தில் கொண்டு மேற்படி கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்திட மாவட்ட கல்வி அலுவலர் இராணிப்பேட்டை மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.540/அ5/2022, நாள்.03.12.2022ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு மேற்படி பணிகள்

மேற்கொள்வதற்கான தோராய செலவினத் தொகை ரூ.1.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) அன்றம் அனுமதிக்கலாம்

2) இப்பணிக்கான செலவினத்தை கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

**தீர்மான எண்**.304, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.12)** ஆற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளில் பொதுமக்களுக்கு பயன்பெறும் வகையில் படிவங்கள் 6, 7, மற்றும் 8 இவை அனைத்தும் பெற்று புதிய வாக்காளர்கள் பதிவும், நீக்கல் மற்றும் திருத்தங்கள் இவை அனைத்து பணிகளும் Online–ல் பதிவேற்றம் செய்திடவும், அப்பணி தேர்தல் பணி என்பதாலும் விரைவாக பணியினை மேற்கொள்ளவும் ஆகும் செலவு ரூ.10,000/– தொகையினை வழங்க மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.948/2016/எப்1

**தீர்மான எண்**.305, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.13)** நகரமைப்பு பிரிவு, மனைப்பிரிவு (சாய்பாபா) சம்மந்தமாக திரு.எம்.ரகமதுல்லா ஆற்காடு அவர்கள் நகராட்சி ஆணையர் மீது சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.W.P.No.22585/2022 வழக்கு தொடர்ந்துள்ளார். நகராட்சி சார்பாக வழக்கினை நடத்த திரு.பி.ஆன்ந்த் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகி வாதாடவும் வழக்கு கட்டணம் ரூ.20,000/– வழங்கியுள்ளார். வழக்கு கட்டணத்தை வழங்க மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

ந.க.எண். மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1622/2022/எப்1

**தீர்மான எண்**.306, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.14)** இந்நகராட்சிக்குட்பட்ட வேப்பூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள கிணறு எண்.1ல் இருந்து நீர்சேகரிப்பு கிணற்றிக்கு புதிதாக கேபிள் பதித்தல் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் வேப்பூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள கிணறு எண்.1ல் இருந்து நீர்சேகரிப்பு கிணற்றிக்கு மேல்பரப்பில் செல்லவும் பழைய பைப்லைனை மணல் பரப்பில் பள்ளம் எடுத்து திரும்ப கீழே பதித்தல் மற்றும் கிணறு எண்.1ல் இருந்து நீர் சேகரிப்பு கிணற்றிக்கு புதிதாக கேபிள் லைன் பதித்தல் பணியினை திருவாளர் ராஜாராம் அன்ட் கோ, ஒப்பந்ததாரர் மூலம் ரூ.4,28,728/– செலவினத்தில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்**.307, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.15)** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9, கோட்டைமேட்டுத் தெரு பொது சுகாதார வளாக கழிப்பிடத்தில் உள்ள செப்டிக் டேங்க் மற்றும் வார்டு எண்.4ல் அமின்பிரான் தர்கா தெருவில் உள்ள துப்புரவு பணியாளர் குடியிருப்பு (Block A & B) கட்டிடதகில் உள்ள செப்டிக் டேங்க் தொட்டியில் கழிவுநீர் நிறைந்து உள்ளதால் சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பொதுநிதியில் ரூ.3,76,000/- செலவினத்தில் ஸ்ரீ வள்ளி மலையான் அன்ட் கம்பெனி ஒப்பந்ததாரர் மூலம் மேற்கண்ட இடங்களில் உள்ள செப்டிக் டேங்க் தொட்டியில் உள்ள கழிவுநீர் செப்டிக் டேங்க் கழிவுநீர் அப்புறப்படுத்த வாகனம் மூலம் வெளியேற்றுதல் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்**.308, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.16)** இந்நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் தண்ணீர்வசதி இல்லாததால் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பொதுநிதியில் ரூ.3,90,000/- செலவினத்தில் பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் புதியதாக 6" ஆழ்துளை கிணறு அமைத்து 1.5 எச்.பி மோட்டார், 2000 லிட்டர் சின்டெக்ஸ் டேங்க் பொருத்துதல் இதர பழுது பராமரிப்பு மேற்கொள்ளுதல் மற்றும் நகரட்சி அலுவலக டேங்கில் இருப்பு வைப்பதற்கு 1.எச்.பி மோட்டார்கள் சின்டெக்ஸ் டேங்குடன் வாங்குதல் பணியினை திரு.என். எழிலன் ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்**.309, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.17)** இந்நகராட்சிக்குட்பட்ட வேப்பூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 75 எச்.பி மோட்டார் பழுதடைந்துள்ளதால் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பொதுநிதியில் ரூ.1,53,400/- இலட்சம் செலவினத்தில் M/s.K. ராஜாராம் அன்ட் கோ ஒப்பந்ததாரர் மூலம் வேப்பூர் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 75 எச்.பி மோட்டார் பழுதினை சரிசெய்து உதிரி பாகங்கள் புதிதாக மாற்றி பொதுத்துதல் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்**.310, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.18)** ஆற்காடு நகராட்சியில் தினசரி மார்க்கெட் புதியதாக கட்டும் பணிகள் மேற்கொள்ள கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2022-23 திட்டத்தின் கீழ் கீழ்காணும் நிதி ஏற்பட்டு விவரப்படி நிர்வாக அனுமதி வழங்கி வரப்பெற்றுள்ள அரசாணை நிலை (4D) எண்.23, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (SS&FC) துறை நாள்.01.12.2022 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| Sl.No | Project Name | Proposed Project Cost | Appraised Project Cost | KNMT share | ULB Share |
|---|---|---|---|---|---|
| 1 | Construction of Daily Market (Chennai-Arani road) in Ward No.A SF No.114-145, Block NO.28 in Arcot Municipality | 700.00 | 348.00 | 174.00 | 174.00 |

அ.கு. 1) மன்றம் பதிவு செய்யலாம்.

2) திட்ட பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர்நடவடிக்கை கள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.0368/2022/இ1

**தீர்மான எண்**.311, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.19)** இந்நகராட்சிக்குட்பட்ட வேப்பூர் தலைமை நீரேற்று நிலையத்தில் புதிதாக Pipe Carrying Bridge அமைக்கும் பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளதால் அவ்விடத்தில் மண் பரிசோதனை செய்து Soil test ஆய்வறிக்கை சான்று மற்றும் வடிவமைப்பு (Structure Design) பெறுவதற்கும், மேலும் தலைமை நீரேற்று நிலையத்திலுள்ள பழைய Collection Well ) ஆய்வறிக்கை சான்று பெறுவதற்கும் The Director CTDT Anna University, Chennai – க்கு செலுத்த வேண்டிய ஆய்வு கட்டணத்தொகை ரூ.1,06,200/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

3) இப்பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்கண்ட ஆய்வு கட்டணத் தொகையை Anna University, Chennai – க்கு செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.312, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.20)** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.35205/2022/CFC-1 நாள்.14.10.2022ன் படி ஆற்காடு நகராட்சிக்குட்பட்ட நகர்புற ஆரம்ப சுகாதார மையத்தில் (UPHC)-ல் புதியதாக கட்டிடம் கட்டுதல் பணிக்க (NUHM-2022-23) திட்டத்தின் கீழ் ரூ.120.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) இப்பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணிக்கு தொழில்நுட்ப அனுமதி பெ.றுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.313, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.21)**

ஆற்காடு நகராட்சிக்கு சொந்தமான மாங்காய் மண்டி கடைகள், எம்.ஜி.ஆர் கட்டிட கடைகள், காந்தி பில்டிங் கடைகள் மற்றும் காலியிடம் ஆகிய குத்தகை இனங்களை இடித்து புதியதாக கடைகள் கட்ட ரூ.**348.00** இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் இருந்து வரப்பெற்ற அரசாணையில் (KNMT) (நிலை) எண்.(4D) **23**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.**01.12.2022** ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, இந்நகராட்சிக்கு சொந்தமான **47** கடைகள் அதற்கான மொத்த கேட்பு தொகை ரூ.**6,57,422/–** பிப்ரவரி–**2023** மற்றும் மார்ச்–**2023** இரண்டு மாதங்கள் கேட்பு தொகை நீக்கம் செய்யவும், மேற்படி கடைகள் இடித்து புதிய கட்டிடம் கட்ட இருப்பதால் வரும் **31.01.2023**க்குள் கடையை காலிசெய்ய குத்தகைதராரர்களுக்கு நோட்டீஸ் அனுப்புவதற்கும், மேலும், நிலுவை வாடகை தொகையினை செலுத்தி இரசீது பெற்றுக்கொள்ளவேண்டும் என குத்தகைதாரர்களுக்கு அறிவிப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அ.கு. 1)</u> மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) மேற்படி கடையை காலிசெய்ய அறிவிப்பு அனுப்புவதற்கு நகரமன்ற தலைவர் அவர்கள் முன் அனுமதி வழங்கலாம்.

3) **47** கடைகளின் கேட்பு தொகை ரூ.**6,57,422/–**பிப்ரவரி–**2023** மற்றும் மார்ச்–**2023** இரண்டு மாதத்திற்கு கேட்பு நீக்கம் செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்**.314, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.22)**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.34343–2/SBM–1/2022 நாள்.14.12.2022–ன் படி ஆற்காடு நகராட்சியில் புதிதாக 20 Nos. Lithium Battery operated vehicle வாங்குவதற்கு ரூ.37.60 லட்சத்திற்கு அனுமதி அளித்து நிதி ஒதுக்கீடு செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே தற்போது தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு 5% GST உடன் சேர்த்து ரூ.39.50 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு, 1) மன்றம் பதிவுசெய்யலாம் மற்றும் அனுமதிக்கலாம்.

2) இப்பணிக்கான கூடுதல் செலவினத் தொகையை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.315, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.23)**

ஆற்காடு நகராட்சிக்குட்பட்ட தோப்புக்கான நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் புதிதாக கட்டிடம் கட்டுதல் பணிக்கு மண் பரிசோதனை செய்வதற்கான கட்டணத்தொகை ரூ.17,700/−ஐ The Principal, Thanthai periyar அரசு பொறியியல் தொழில்நுட்ப கல்லூரி அவர்களுக்கு வங்கிவரைவோலை எடுத்து தொகை செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

2) மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.316, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.24)**

இந்நகராட்சியில் 2018−19ம் ஆண்டு பொதுநிதி திட்டத்தின் கீழ் ரூ.1.30 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.30, கிளைவ் பஜார் நடுத்தெரு பகுதியிலுள்ள பூங்கா பகுதியினை சுற்றிலும் துடுப்பு வேலி (Fencing) அமைக்கும் பணிக்கு 14.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு 28.06.2019 அன்று நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.பி.பிச்சாண்டி என்பவருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. ஆனால் மேற்கண்ட ஒப்பந்ததாரர் இதுநாள் வரை பணியினை ஆரம்பிக்கவில்லை. எனவே இந்த பணிக்கான ஒப்பந்தப்புள்ளியை இரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் இந்தப் பணியினை செய்ய தவறிய ஒப்பந்ததாரர் திரு.பி.பிச்சாண்டி அவர்களால் செலுத்தியுள்ள ஒப்பந்த பிணைவைப்புத் தொகையினை பறிமுதல் செய்திடவும் அவர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்**.317, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

திரு.பி.பிச்சாண்டி ஒப்பந்ததாரர் மீது உரிய துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளவும், மேலும் நகராட்சியில் ஒப்பந்தப்பணிகள் எடுத்து பணி செய்யாமல் நிலுவையில் உள்ள் ஒப்பந்ததாரகள் மீது உரிய துறைரீதியான நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தில் ஏகமனதாக தீமானிக்கப்பட்டது.

**பொருள் எண்.25)**

இந்நகராட்சியில் 2018−19ம் ஆண்டு பொதுநிதி திட்டத்தின் கீழ் ரூ.1.30 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.1, அம்மணியம்மாள் பூங்கா பகுதியிலுள்ள பூங்கா பகுதியினை சுற்றிலும் துடுப்பு வேலி (Fencing) அமைக்கும் பணிக்கு 14.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு 28.06.2019 அன்று நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.பி.பிச்சாண்டி என்பவருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. ஆனால் மேற்கண்ட ஒப்பந்ததாரர் இதுநாள் வரை பணியினை ஆரம்பிக்கவில்லை. எனவே இந்த பணிக்கான ஒப்பந்தப்புள்ளியை இரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் இந்தப் பணியினை செய்ய தவறிய ஒப்பந்ததாரர் திரு.பி.பிச்சாண்டி அவர்களால் செலுத்தியுள்ள ஒப்பந்த பிணைவைப்புத் தொகையினை பறிமுதல் செய்திடவும்

அவர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அ.கு. 1) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்**.318, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

திரு.பி.பிச்சாண்டி ஒப்பந்ததாரர் மீது உரிய துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளவும், மன்றத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. மேலும் திரு.பி.பிச்சாண்டி ஒப்பந்ததாரர் பங்குதாரராக உள்ள PRKAY CONSTRUCTION PVT LTD, நிறுவனத்தின் மூலம் SRP 2020–21ம் ஆண்டு திட்டத்தின் கீழ் வார்டு 19ல் அமைக்கப்பட்ட தார்சாலைகள் தரமற்றதாக உள்ளதாகவும் அதனை ஆய்வுசெய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள் மூலமாக குழு அமைத்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என திரு.தா.குணாளன் வார்டு 19 நகரமன்ற உறுப்பினர் அவர்கள் நகரமன்றத்தில் கோரிக்கை செய்தார். இந்த கோரிக்கையை ஏற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. மேலும் மேற்கண்ட PRKAY CONSTRUCTION PVT LTD, ஒப்பந்ததாரர் அளித்துள்ள சொத்து மதிப்பு சான்றிதழ் வட்டாச்சியர் ஆற்காடு அவர்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளது. இந்த சொத்திற்கு நகராட்சியில் முறையாக வரிவிதிப்பு விதிக்கப்பட்டுள்ளதா என ஆணையர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண்**.26)

ஆற்காடு நகராட்சி நகரமைப்பு பிரிவில் பயன்படுத்தப்படும் Printer colour–க்கு தேவையான Colour ink மற்றும் Computer–க்கு தேவையான IDB External Hard Desk ஒரு எண்ணிக்கையில் நகரமைப்பு பிரிவிற்கு வாங்க உள்ளூர் விலைப்புள்ளி பெற்று மேற்படி பொருட்கள் வாங்க தோராய செலவுத்தொகை ரூ.10,000/– நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.
அ.கு. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்**.319, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஒம்) பெ.தேவி
நகரமன்ற தலைவர்

/உண்மை நகல்/

ஆணையாளர்(பொ)
ஆற்காடு நகராட்சி